**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | STC No. 390/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | அபிநயா, வயது 22 |
| Father Name/Husband Name | : | கஜேந்திரன் |
| Village | : | சி.ஆர். காலனி |
| Taluk | : | கயத்தார் |
| Calling | : | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of November 2025.

**(Accused present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது சி.ஆர். காலனியில் வசித்து தனியார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவ சமயம் நான் கல்லூரி இறுதி ஆண்டு படித்து கொண்டிருந்தேன். 07.11.2024 ஆம் தேதி இரவு நானும், எனது அம்மா மதுரையிலிருந்து கோவில்பட்டி வருவதற்காக மதுரை – நாகர்கோவில் செல்லும் TN 74 1981 என்ற எண் கொண்ட அரசு பேருந்தில் கிளம்பினோம். அதிகாலை 04.45 மணியளவில் தோட்டிலோவன்பட்டி பாலத்தில் வடக்கிலிருந்து தெற்காக சென்று கொண்டிருக்கும்போது பேருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று கண்டயனர் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2 அந்த விபத்தில் எனக்கும், எனது அம்மாவுக்கும் காயம் ஏற்பட்டது. எனக்கு வாயிலும், பின் தலையிலும் காயம் ஏற்பட்டது. என் அம்மாவிற்கு மார்பிலும், நெற்றியிலும், இரண்டு கால் முட்டியிலும் காயம் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் மூலமாக கோவில்பட்டி அரசு மருத்துமவனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். நான் கல்லூரிக்கு சென்றபோது இரத்தவாந்தி எடுத்ததால் என் அப்பா என்னை நாகபட்டினத்தில் உள்ள மருத்துவ கல்லூரி மருத்துவமனையில்

சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 வழக்கு சம்பந்தமாக சம்பவத்தன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவத்தின் போது நான் பேருந்தின் ஓட்டுனர் இருக்கைக்கு பின்னால் மூன்றாவது சீட்டில் இருந்தேன். நான் ஓட்டுனர் இருக்கையிலிருந்து பின்னால் மூன்றாவது சீட்டில் இருந்ததால் முன்னால் நடக்கும் சம்பவம் என்னால் பார்க்க முடியாது என்றால் சரியல்ல. பேருந்துக்கு முன்னால் சென்று கொண்டிருந்த லாரியின் பதிவு எண், கலர் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4 சம்பவ நடந்த இடத்தின் அருகே ஸ்ரீகரா பள்ளி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தின் அருகே கணேஷ் பேக்கரி, போலீஸ் செக் போஸ்ட் உள்ளதா என்றால் இருட்டாக இருந்ததால் எனக்கு தெரியாது. சம்பவ நேரம் இருட்டாக இருந்ததால் சத்தம் கேட்டுதான் சம்பவத்தை நான் பார்த்தேன் என்றால் சரியல்ல, மோதுவதை நான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் டிரைவர் சீட்டுக்கு பின்னால் மூன்றாவது சீட்டில் இருந்த விவரத்தை சொன்னேன். போலீசார் விசாரணையில் நான் பயணித்த டிக்கெட்டை கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை.

5 நான் இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பாலம் மேல்நோக்கி செல்லகூடியது என்றால் மேல்நோக்கி கீழ் வரும். சம்பவம் நடந்த இடம் பாலம் இறங்கும் இடம் ஆகும். கண்டெய்னர் லாரியில் நிறைய கம்பிகள் நீட்டி கொண்டிருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. போலீசார் விசாரணையில் கண்டென்யர் லாரியையோ, அரசு பேருந்து ஓட்டுனரையோ நான் பார்த்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவ நேரம் அதிகாலை நேரம் என்பதால் நான் பேருந்தில் தூங்கி கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கும், எனது தாயாருக்கும் அதிக நஷ்ட ஈடு பெற போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,

Kovilpatti.